எண்:10/2024 நாள்: 19.01.2024

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**
**எண்.3, தேர்வாணையச் சாலை , சென்னை .**

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் பல்வேறு துறைகளில் காலிப்பணியிடங்களை நிரப்ப 824 இளைஞர்கள் தேர்வு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கடந்த டிசம்பர் 2023 முதல் தற்பொழுது வரையிலான காலத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் கீழ் கால்நடை உதவி மருத்துவர் பதவிக்கு 675 நபர்களும், இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் செயல் அலுவலர் நிலை IV பதவிக்கு 65 நபர்களும், கூட்டுறவு துறையின் கீழ் கூட்டுறவு சங்கங்களின் இளநிலை ஆய்வாளர் பதவிக்கு 29 நபர்களும், வனத்துறையின் கீழ் வனத்தொழில் பழகுநர் பதவிக்கு 10 நபர்களும் மற்றும் பல்வேறு துறைகளில் தொகுதி IV–ல் அடங்கிய இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளுக்கு 45 நபர்களும் மொத்தம் 824 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ச.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,
செயலாளர்